## நவம்பர் - 24

**"இதனால் நான் தேவனுக்கும், மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனசாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்." - அப் 24.16.**

நம்முடைய விழுந்துபோன சுபாவத்தின் மற்ற முக்கியமான அம்சங்களுக்கு தேவையாயிருக்கிறது போல, நம்முடைய மனசாட்சிக்கும் ஒழுங்குபடுத்தி நடத்தப்படுவது தேவையாயிருக்கிறது. நம்முடைய மனசாட்சி ஒழுங்குபடுத்தப்பட்டு நடத்தப்பட வேண்டியதாயிருந்தால், அதை நாட்டவும், ஒழுங்குபடுத்தி நடத்தவும் ஏதோ ஒரு திட்ட அளவு நமக்கு இருக்க வேண்டும். நம்முடைய மனசாட்சி ஒரு கைக்கடிகாரம் போல இருக்கிறது. அதனுடைய முகத்தில் சரியான நேரம் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நேரம் காட்டுகிற கருவியாக அது சரியான நேரத்தைக் காட்டுவது அதனுடைய முக்கிய விசை (மெயின்ஷ்பிரிங்) தகுந்த பிரகாரமாக ஒழுங்குபடுத்தப்படுவதைப் பொறுத்தே இருக்கிறது. அப்படியானால்த்தான் கடிகாரம் நேரத்தை உண்மையாகக் காட்டும். அதுபோலவே நம்முடைய மனச்சாட்சியும், எது சரி? எது தப்பு? என்று நமக்குச் சுட்டிக்காட்டுவதற்கு தயாராக இருக்காது. ஆனால் தேவனுடைய வார்த்தையில் கொடுக்கப்பட்டிருக்கிற அந்த முக்கியமான விசை (மெயின்ஷ்பிரிங்) புது இருதயம், சுத்தமான சித்தம் சம்பந்தமாக மனச்சாட்சி ஒழுங்குபடுத்தப்பட்ட பிறகு மாத்திரமே எது சரி? எது தப்பு? என்று நமக்கு உண்மையாகவே தெரிவிக்க அது நம்பப்படத்தக்கதாய் இருக்கும். **- Z ’00, 360 (R 2733).**

தேவனுடைய சிங்காசனத்திற்கு நீதி அஷ்திபரமாக இருக்கிறது போல, தேவனுடைய பிள்ளைகளாகவும், அவருடைய ஊழியக்காரராகவும் இருக்கிற நம்முடைய கிரியைகள் எல்லாவற்றிற்கும் அதுவே அஸ்திபரமாக இருக்க வேண்டும். அது முழு மனதோடும், முழு இருதயத்தோடும், முழு ஆத்மாவோடும், முழு பலத்தோடும் தேவனிடத்தில் அன்பு கூறுகிறதும், பிறனிடத்தில் தன்னைப்போல அன்பு கூறுகிறதுமான கடமை அன்பைக் கொண்டதாயிருக்கிறது. தேவனுக்காகவும், மனிதனுக்காகவும், நீதியின் தேவைக்கு எதிராகச் செய்யப்படுகிற எந்த ஊழியமும் தேவனால் அங்கிகரிக்கப்படாததாகவும் மற்றவர்களுக்கும் நமக்கும் கெடுதியை விளைவிக்கக் கூடியதாயும் இருக்கிறது. ஏனென்றால், நீதியை மீறி பலிசெலுத்தும்போது, கீழ்ப்படிதல் அதாவது நீதியை நடப்பிப்பது பலியைப் பார்க்கிலும் உத்தமமானது. பரி.பவுலைப்போல, தேவன் சார்பாகவும், மனிதர் சார்பாகவும் நீதியாக நடந்து கொள்ள இடைவிடாமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். இவ்விதமாக இருந்தால் மாத்திரம், கர்த்தருக்கும், நம்முடைய தோழர்களுக்கும் விரோதமாக பாவம் செய்வதிலிருந்து விடுவிக்கப்பட ஒரு மனசாட்சியை உடையவர்களாக இருக்கலாம். பிறகு இப்படிப்பட்ட ஒரு நல்ல மனசாட்சியின் ஆதாரத்தின் பேரில் நம்முடைய பலியின் கிரியைகள் கர்த்தருடைய ஆவிக்கும், வார்த்தைக்கும், பராமரிப்புக்கும் இசைவாக இருக்குமானால், சரியானவையாயும் அங்கிகரிக்கப்படுவதாயும் இருக்கும். **- P ’32, 167.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**அப் 23:1; ரோம 2:14,15; 9:2; 14; 1கொரி 8:7-13; 10:27-31; 2கொரி 1:12; 4:2; 1தீமோ 1:5,19; 3:9; எபி 9:14; 10:22; 13:18; 1பேது 2:19; 3:16,21; நீதி 28:1; அப் 2:37; 1தீமோ 4:1.**

**கோபுர வாசிப்பு : Z ’11, 424 (R 4919).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் நல்மனச் சாட்சியுடனிருந்தேனா? துர்மனச்சாட்சியுடனிருந்தேனா? எவ்வாறு? ஏன்? பலன்கள் என்ன?**